OS.No.310/2013 – 27.3.2025

PW1 – ராமசாமி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 13 முதல் 17, 19 முதல் 21 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா 2வது அயிட்ட சொத்து வழக்கு தாக்கல் செய்யும்போது ஏற்கனவே எங்கள் குடும்பத்திற்கு இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. புதிதாக சேர்க்கப்பட்ட வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் கிராமம் தெரியுமா என்றால் தீவட்டிப்பட்டி கிராமம் சர்வே எண்.116/1ஏ ஆகும்.

சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் 743 ஆகும். பட்டா பழனியப்பன் மகன் கந்தசாமி பெயரில் தனி பட்டாவாக உள்ளது என்றால் சரி. பட்டாவில் பழனியப்பன் மகன் கந்தசாமிக்கு 1989க்கு முன் கொடுக்கப்பட்ட பட்டா என்றால் சரி.

என் பெயரில் எந்த சொத்திற்காவது தனி பட்டா உள்ளதா என்றால் இல்லை, கூட்டு பட்டாவாகதான் உள்ளது. எனது வீடு உள்ள இடத்திற்கு தனி பட்டா உள்ளதா என்றால் இல்லை. அந்த வீட்டின் மதிப்பு சுமார் ஒன்னரை கோடி இருக்கும் என்றால் எனக்குத் தெரியாது. வீடு எவ்வளவு சதுரடி இருக்கும் என்றால் எனக்குத் தெரியாது. பாக சொத்துக்கள் அனைத்தும் கூட்டாக அனுபவத்தில் உள்ளது என்றால் சரி.

எனது வீட்டிலும் அனைத்து பிரதிவாதிகளுக்கும் பாகம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மொத்தம் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 5 வீடுகள் உள்ளது. ஒரு வீட்டை கந்தசாமி வேறு ஒரு சர்வே எண்ணில் கட்டி உள்ளார். ஒரு வீட்டை சுப்ரமணி தனியாகவும், பழனியப்பன் மகன் மணிவண்ணன் தனியாகவும், நான் தனியாகவும் வீடு கட்டி உள்ளோம். தாவா சொத்து அனைத்தும் ஒரே சர்வே எண்ணில் உள்ளதா என்றால் எனக்குத் தெரியாது. வழக்கு சொத்துக்கள் விவசாய நிலம் என்றால் சரி. அதில் எத்தனை போர் மற்றும் கிணறுகள் உள்ளது என்றால் 8 கிணறுகள் உள்ளது. போர் எத்தனை உள்ளது என்று தெரியாது.

எனது நிலத்தில் எத்தனை கிணறு மற்றும் போர் உள்ளது என்றால் 2 கிணறுகள் உள்து. ஒரு போர் போட்டேன். ஆனால் அதில் தண்ணீர் இல்லை. காராமணி என்பவரும் சுப்ரமணி என்பவரும் சகோதரர்கள் என்றால் சரி. காராமணி மற்றும் சுப்ரமணியின் தகப்பனார் பெயர் என்ன என்றால் முத்துகவுண்டர். அவர் எனக்கு தாய்மாமன் ஆவார். சுப்ரமணியும் காராமணியும் தனித்தனியாக ஓட்டி வருகிறார்கள் என்றால் இல்லை. ஒன்றாகதான் ஓட்டி வருகிறார்கள். அவர்களுக்கு வீடு ஒன்றாக உள்ளதா என்றால் தனித்தனியாக உள்ளது.

காராமணியும் சுப்ரமணியும் எத்தனை போர்கள் போட்டார்கள் என்றால் எனக்கு நினைவில்லை, ஆனால் அனைத்திலும் தண்ணீர்

கிடையாது. அவர்கள் தனியாக போர் போட்டார்களா என்றால் இல்லை. 2வது அயிட்ட சொத்தை யார் வாங்கினார்கள் என்றால் அர்த்தனாரி கவுண்டர் மகன் செங்கோட கவுண்டர் வாங்கினார். எந்த வருடம் வாங்கினார் என்றால் வருடம் தெரியாது. செங்கோட கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் வருடம் தெரியாது.

செங்கோட கவுண்டரின் வாரிசுகள் பழனியப்பன் மற்றும் முத்து என்றால் சரி. செங்கோட கவுண்டர் உயிருடன் உள்ளபோதே 2ம் பிரதிவாதிக்கு 2ம் அயிட்ட சொத்தை பிரித்து கொடுத்து அவரது பெயரில் தனி பட்டாவாக உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. அவ்வாறு பிரித்து கொடுத்ததால்தான் அவரவர்கள் தனி பட்டா பெற்று சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.